# புதிய பூமி

PUTHIYA POOMI வெகுஜன எழுச்சி இதழ்


## மனித உரிமைகள் இலங்கையில் என்ன விலை?

இம் மாதம் (டிசம்பர்) 10ம் திகதி சர்வ தேச மனித உரிமைகள் தினம். மனிதனின் உயர்ந்த பெருமதியையும், மனி உயிரின் உன்னத பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்துவதற்காகவே சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப் பிரகடனத்

(6ம் பக்கம் பார்க்க)

சுற்று 1 1985 டிசம்பர் 25 விலை ரூபா 2-00 சுழற்சி 2

# அரசியல் தீர்வு இல்லாவிடின் அழிவுகளைத் தடுக்க இயலாது!

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசின் மூலமாக முன்வைத்துள்ள மாற்றுத் திட்ட அறிக்கையை மையமாக வைத்து இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை அரசு ஆரம்பிக்க வேண்டும். இதன் அவசியத்தைப் புறக்கணித்து ராணுவத் தீர்வு என்ற வழியில் அரசு முன்னேற முயலுமாயின் அது முழு நாட்டையும், முழு மக்களையும் இன்றுள்ள நிலையிலும் பார்க்க மோசமான அழிவுகளுக்குள் தள்ளிவிடவே செய்யும்.

இவ்வாறு கடந்தவாரப் பிற்பகுதியில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழுக் கூட்டத்திற்குப்பின் வெளியிடப்பட்ட பத்திரிகைஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கையில், இலங்கையில் எழுந்துள்ள இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அடிப்படைச் சமுதாய மாற்றத்துக்கான போராட்டத்தின் மூலம் பெறப்படும் பிரதேச சுயாட்சியே தகுந்த பரிகாரம் என்பதில் எமது கட்சி இப்பொழுதும் திடமான நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் அந்த இலக்கை அடைவதற்கு முன் இனங்களுக்கிடையில் திட்டமிட்ட மோதல்களையும் இனப் படுகொலைகளையும், ராணுவ விஸ்தரிப்புகளையும் நடாத்தி முழு மக்களின் கவனத்தையும் திசை திருப்பிவிட்டு, தனது பாசிச சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயலும் யூ. என். பி. ஆட்சியின் தேசவிரோத மக்கள்விரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது இன்றைய அவசியத் தேவையாகும். அந்த வகையில் தமிழ் மக்களையும் ஏனைய மக்களையும் இன்று மோசமாகப் பாதித்துள்ள தேசிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற இனப்பிரச்சனைக்கு குறைந்த பட்சமாவது ஒரு அரசியல் தீர்வு அடையப்படல் வேண்டும் என்பதையே எமது கட்சி வறபுறுத்துகின்றது. அத்தகைய அரசியல் தீர்வுக்கு அரசு முன்வைத்துள்ள செயல் திட்ட அறிக்கையில் காணப்படும் அம்சங்கள் எதுவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதாக அமையவில்லை. அதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசின் மூலமாக முன்வைத்துள்ள மாற்றுத்திட்ட அறிக்கையில் பல ஆக்கபூர்வமான அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை அவ் அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றது. எனவே அவ் அறிக்கையை அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் மையமாகக் கொண்டு சாத்தியமான தீர்வுக்கு வரவேண்டும் என்பதையே இன்றைய சூழ்நிலையில் மெது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகிறது.

## கூட்டணியின் மாற்றுத்திட்ட யோசனைகள் பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்பட வேண்டும்

## தொண்டமானின் பிரார்த்தனை இயக்கம் அரசுக்கு எதிரான வெறுப்பை காட்டுகிறது!

மேலும் அவ்வறிக்கை, மலையக மக்களின் பிரஜாவுரிமைக்கும், இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் எதிர்வரும் தைப் பொங்கல் தினத்தில் இருந்து மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பிக்கவுள்ள இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றது. காலை முதல் ஐந்து மணித்தியாலங்கள் வேலைக்குச் செல்லாது தொழிலாளர்கள் பிரார்த்தனை, மௌன ஊர்வலம் போன்ற நடவடிக்கைகளைச் செய்து தமது உறுதியான நிலைப்பாட்டை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அமைச்சர் தொண்டமானின் வேண்டுகோள் இன்றைய மலையகச் சூழலில் நிதானமானதும் நியாயமானதுமாகும். யூ. என். பி. அரசின் அமைச்சராக இருந்துகொண்டே இவ்விதமான ஒரு இயக்கத்தை நடத்துவது என்பது துணிச்சல் மிக்கதும், சாராம்சத்தில் அரசுக்கு எதிரானதும் ஆகும். அந்த வகையில் இ. தொ. கா. வின் அவ் வியக்கத்தை ஆதரித்து அதில் கலந்து கொள்வது சகல மலையக தொழிற் சங்க, பொது ஸ்தாபனங்களினதும் கடமையாகும் என்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சுட்டிக் காட்டுகின்றது. ★

# வடக்கிலும்-தெற்கிலும் பொது எதிரி யூ. என். பி! அதை முறியடிக்க மக்கள் அணிதிரளவேண்டும்!

யூ. என். பி. ஆட்சியும் அதன் தலைவர்களும் தமது சுயரூபத்தை மக்கள் முன் தெளிவாகக் காட்டி வருகின்றனர். தமது பயணம் பாசிச சர்வாதிகாரத்தை நோக்கியது என்பதையும், அந்தப் பாதையில் வேகமாக முன்னேறி வருவதையும் தமது பொருளாதார அரசியல் ராணுவ நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழர்களை மட்டுமன்றி இந்நாட்டு உழைப்பாளி வர்க்கத்தினர் சகலரையும் அடக்கி ஒடுக்கி தமது தனிநபர், தனிக் கட்சி பாசிச சர்வாதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதையே யூ. என். பி. யும் அதன் தலைவர்களும் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இந்தக் குறிக்கோள் யூ. என். பி. கட்சி எதிரணியில் இருந்த ஏழு ஆண்டுகளில் நன்கு திட்டமிடப்பட்டது. எத்தகைய அரசியல் அமைப்பு, எவ்வாறான பொருளாதாரக் கொள்கை, எவ்வழியில் இனங்களை மோதவிடுவது, இலங்கை மக்களின் கவனத்தை எந்த விடயத்தில் திசைதிருப்பி வைத்திருப்பது, யார் யாரிடம் உதவி பெறுவது? யாரை எதிர்ப்பது? யாரை அணைப்பது? என்பது போன்ற விடயங்கள் யாவும் யூ. என். பி. ஆட்சி பதவிக்கு வருமுன்பே வரையறுக்கப்பட்ட விடயங்களாகும். இவ்வரையறுப்புக்களில் யூ. என். பி. யின் உயர் மட்ட மூளைகள், அவற்றுள்ளும் முக்கியமான அதி உத்தம நரித் தந்திர மூளை மட்டுமன்றி அமெரிக்க ஏகாதிபத்திய மூளைகளும் சேர்ந்து வகுத்த கொள்கைகளே இன்று நடைமுறையாகி வருகின்றன.

யூ. என். பி. பதவிக்கு வந்தவுடன் இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பார்த்து ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என்று ஜே. ஆர். போர் முரசு

(6ம் பக்கம் பார்க்க)



புதிய பூமி

1985 டிசெம்பர் 25

# 86 யுத்த ஆண்டா சமாதான ஆண்டா?

சென்ற ஆண்டு சர்வகட்சி மாநாட்டைவைத்து ஏமாற்ற முடிந்தது. இந்த ஆண்டு, தமிழ் மக்களின் உறுதியான மனப்பாங்கு காரணமாகவும், சிங்கள மக்களினதும் முற்போக்கு சக்திகளினதும் இடையறாத வற்புறுத்தலினாலும், தன்னால் 'பயங்கரவாதிகள்' 'கொலைகாரர்கள்' என அழைக்கப்பட்ட தமிழ்த் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஜே. ஆரின் யூ. என். பி அரசு இணங்கவேண்டியிருந்தது. இருப்பினும் அந்தச் சந்தர்ப்பத்தை இதயசுத்தியுடன் பயன்படுத்த அது தவறிவிட்டது; போதாததற்கு 'அது எமது இராணுவ பலத்தைப் பெருக்கப் போதிய அவகாசத்தை நல்கியது' என்ற ஆணவப் பேச்சு தலைவர்களிடமிருந்து வந்திருக்கிறது. இவர்கள் எவ்வளவுதூரம் நாட்டின் எதிர்கால நலனின் அக்கறையுடையவர்கள்?

பாராளுமன்றத்தில் எதிர்வரும் ஆண்டை யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்ற கொக்கரிப்புக்கள் கிளம்பியது; அதேவேளை அமைச்சர் தொண்டமான் எதிர்க்கணையாக சமாதான ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளார். அதைச் சொல்லளவில் நிறுத்திவிடவில்லை—சமாதானத்துக்குப் பங்கம் விளைக்காத வகையிலே மலையகமக்களின் பிரஜாவுரிமைக்கானதும் இனப் பிரச்சனையின் அரசியல் தீர்வுக்கானதுமான போராட்டத்தை அவர் முன்வைத்திருக்கிறார். அவரே கூறியதுபோல பெரும்பான்மையான சிங்கள மக்களைப் புண்படுத்தாத விதத்திலும் அதேவேளை ஒடுக்கப்படுகிற இன மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் விரல்விட்டெண்ணக்கூடிய ஒரு சில உன்மத்தர்களின் இறுமாப்பைத் தகர்க்கவும் கூடிய போராட்ட வடிவங்களை அவர் தேடுகிறார். இது அவரது போராட்டத்திற்குப் பரந்துபட்ட மக்களின் ஆதரவைத் திரட்டக்கூடியது. அதேவேளை 'சமாதான ஆண்டாக' வருகிற ஆண்டைப்பேண எடுக்கப்படும் நிதானமான நடவடிக்கை. அவரைச் சில நல்ல இதயங்கள் மதிப்பிட்டிருந்ததுபோல அவர் மிகத் துணிச்சலான ஒரு தேசியவாதிதான்.

இந்தத் தேசிய நலன்சார்ந்த மார்க்கத்துக்கு மாறாகத் தமது அரசியல் வங்குரோட்டுத்தனத்தை மறைக்க யுத்தப் பிரகடனக்கோஷத்தை முழக்குவோர், தமக்கு முன்னே கே. எம். பி. இராஜரத்தினாவிலிருந்து சிறில் மத்தியூவரை உயரத்தூக்கிய பாறாங்கல்லைத் தத்தமது கால்களிலேயே போட்டு அழிந்தார்கள் என்பதைத் திரும்பிப்பார்த்தால் போதும். இவர்கள் கோஷிப்பதுபோல ஒரு வருடத்தில் இந்த 'யுத்தத்தை' முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியுமா? நோய்க்காரணிக்குத் தீர்வு காணப்படாதவரை நோய் தீராது. நோய் தீரவில்லையென்பதற்காக நோயாளியைக் கொல்லமுடியாது.

ஆட்சியினரைப் பொறுத்தவரை தம்மைப் பேணுவதற்காக இனப்பிரச்சினை நீடித்திருக்க வேண்டியதாயிருக்கலாம். ஆனால் மிகப் பெரும்பான்மையான சாதாரண உழைக்கும் மக்களே பாதிக்கப்படுகிறார்கள். அத்தகைய உழைக்கும் மக்களின் கிளர்ச்சிகள் இந்தக் கூச்சல்களால் தடுக்கப்பட முடியுமென நினைக்கிறார்கள். அவர்கள் கைகளால் கண்ணைப் பொத்திக்கொண்டு சூரியனை மறைத்துவிட முயல்கிறார்கள்.

இந்தத் தனிநபர் சர்வாதிகார பாஸிஸவாதச் சிறுகும்பல் தனது ஆட்சியைச் சமாதானமாக நடத்தமுடியாத முரண்பாடுகளில் சிக்கித் தடுமாறுகிறது. அதன் விளைவே யுத்தப் பயமுறுத்தல்கள் தெற்கில் அதற்கெனக் குண்டர் படையொன்றைச் சிருஷ்டிக்கலாம், கட்டாய இராணுவச் சட்டம் போட்டு மக்களோடு மக்களை மோதவிடப் பயிற்றுவிக்கலாம் — மறுத்தால்... 'இம்' மென்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால்...?

அவர்கள் தமது அரசியலைச் சமாதானமாக நடத்த முடியாத நிலையில் அரசியலின் நீடிப்பான யுத்தத்தைத் தேர்ந்து, மக்களுக்கெதிரான யுத்தத்தைத் தொடுக்கும் பட்சத்தில், அவர்களுடைய அதர்ம யுத்தத்திற்கெதிரான பரந்துபட்ட மக்களின் தர்மயுத்தத்தை எதிர் நோக்குவர். அதன் மூலம் மட்டுமே மக்கள் தமக்கு விடுதலையையும் யுத்தமற்ற சமுதாயத்தையும் சிருஷ்டிக்க முடியும்.

இந்த இடத்தில் பொருத்தம் கருதி இலக்கியமாத சஞ்சிகை ஒன்றின் வாக்கியங்களோடு 'புதிய பூமி' தன்குரலை இணைத்து ஒலிக்கிறது:

''......தேச ஐக்கியமும் நலனும் முதன்மையானது. யுத்தத்தை வலிந்து இழுக்குமேயானால் அதர்ம யுத்தம் தோல்வியுறும், தர்மயுத்தம் வெற்றிகொள்ளும்.

''தருமம் நசுக்கப்பட்டு அதர்மம் தலைதூக்கும் அவ்வக்கால தேச வர்த்தமானங்கட்கு அமைவாக நான் அவசரிப்பேன், என கிருஷ்ண பரமாத்மா கூறியதாக பகவத்கீதை போதிக்கிறது. இங்கு தர்ம யுத்தமும் அதர்மயுத்தமும் வேறுபடுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. நாம் இங்கு ஒரு அவதாரத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை. சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்களையே நம்புகிறோம்.'' ('தாயகம்- 13' மார்கழி 1985)

● ஆசிரியர் குழு

# தெரிந்தவையும் அறிந்தவையும்

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் இராணுவ சர்வாதிகாரி ஷியா உல் ஹக் எமது அரசினால் கோலாகலமாக வரவேற்கப்பட்டார். அவர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் பிரதமரும் சிறந்த தேசிய வாதியும் மூன்றாவது உலக நாடுகளின் நம்பத்தகுந்த நண்பனுமான பூட்டோவின் அரசை கவிழ்த்து இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்தியவர். உலக நாடுகளினதும் மக்களினதும் எதிர்ப்பு அலையையும் வேண்டுகோளையும் சிறிதும் பொருட்படுத்தாது பூட்டோவை தூக்கில்போட்டவர்.

## கொலைகாரர்கள்!

அவ்வாறே பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற தலைவனை அக்கியூனோ அமெரிக்காவிலிருந்து நாடுதிரும்பி வருகை தந்தபோது விமானநிலையத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டதும், மக்கள் கொந்தளிப்பு ஏற்பட்டதும், கண்துடைப்பாக இராணுவ ஜெனரல் உட்பட சிலருக்கு எதிரகக் வழக்குத் தொடரப்பட்டதும் தெரிந்தவிஷயம். முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுபோல சர்வாதிகாரி மாக்கோஸின் உறவினரான இராணுவ ஜெனரல் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் அதே பதவிக்கு அமர்த்தப்பட்டுள்ளான்.

பிலிப்பீன்ஸ் நாட்டு மக்கள் அத்தீர்ப்புக்குஎதிராகவும், மாக்கோஸின் சர்வதிகார ஆட்சிக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்துள்ளனர். அமரர் அக்கியூனோவின் மனைவி இது பற்றிக் கூறுகையில் ''இந்தப் படுகொலையின் முதலாவது சந்தேக நபர் ஜனாதிபதி மாக்கோஸ் தான்; நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் முதலாவதாக மாக்கோஷைக் கைது செய்வேன்'' என்று குறிப்பிட்டார்.

இத்தகைய அரசியல் படுகொலைகளின் இன்னுமொரு களம் தான் தென்னாபிரிக்கா. தென்னாபிரிக்க நிற வெறியன் ஜனாதிபதி போத்தா பற்றி மாலி தேசத்தைச் சேர்ந்த ரிறமோன் ரெறறே டிற் பாட்ற (Dramone Traore Dit Badra) பீக்கிங் றிவியூ சஞ்சிகைக்கு (இல50.1985) கீழ்க்காணும் கடிதத்தை எழுதியுள்ளார்.

''சீர்திருத்த அழைப்பு எவ்வித முன்னேற்றத்தையும் தரவில்லை'' என்ற தலைப்பின் 'பீக்கிங் றிவியூ இல:34ல் எழுதிய கட்டுரையைப் படித்ததும் ஓ.. என்று அழுது விட்டேன், நான் தென்னாபிரிக்கப் பொலிஸாரைக் கண்டிக்கவில்லை; பிசாசுகளின் இளவரசனான கறைபடிந்த இரு கரங்களைக் கொண்டுள்ள போத்தாவையே கண்டிக்கிறேன். அவன் ஒரு ஜனாதிபதிக்கு ஏற்ற ஆளுமை, தகுதி இல்லாதவன் மட்டுமல்ல அப்பாவி மக்களை கொன்று குவித்தவனுமாவான். இந்த இருபதாம் நூற்றாண்டில் இவனே மிகவும் காட்டுமிராண்டித் தனமான கொலைகாரப்புள்ளி.''

''ஒன்றுமே அறியாத 600 (கடந்த11மாதங்களில் கொல்லப்பட்ட) கறுப்பர்களும் தொடர்ந்து வாழ்வார்களாளின் மனித குலத்திற்கு அளப்பரிய சேவையை அவர்களால் ஒரு காலத்தில் தர முடியும். சுதந்திரத்திற்காகப் போராடும்தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்களின் போராட்டத்திற்கு உறுதுணையாக நிற்கின்றேன்-விசேஷமாக நெல்சன் மண்டலாவின் விடுதலைக்கு. ஒடுக்கப்படும் தென்னாபிரிக்க சகோதர மக்கள் விடுதலை பெறட்டும் என வாழ்த்துகிறேன்.''

எமது நாட்டிலும் 1977ம் ஆண்டைத் தொடர்ந்து வரும் இனப்படுகொலைகளுக்கும் தீவைப்புகளுக்கும் காரணமாக ஒரு பிதாமகனை வரலாறு சொல்லாமலா போகும்.?

★ ★

## ★ தென் ஆசியப் பிராந்திய ஒருமைப்பாடும் அதன் நெளிவு சுழிவுகளும்

தென் ஆசியப் பிராந்திய கூட்டு ஒத்துழைப்பிற்கான இயக்கம் சமீபத்தில் பங்களாதேசில் கூடிய ஏழு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களினது உச்சிமாநாட்டின் போது பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

எல்லைப் பிரச்சினை, அந்நிய நாட்டுக் குடியேற்றங்கள், ஆயுதப் பெருக்கம் போன்றவற்றிலும் அரசியல் பொருளாதார துறைகளிலும் தென் ஆசிய நாடுகளிடையே பல வித முரண்பாடுகள் நிலவி வருகின்றன.

இப் பிராந்திய நாடுகள், ஏகாதிபத்தியங்களின் படுபாதகமான பொருளாதாரச் சுரண்டலாலும், மேலாதிக்க வல்லரசுகளின் தலையீடுகளாலும் வேறு மிகவும் பாதிப்பிற்குட்பட்டுள்ளன. இதன் விளைவாக இது மோசமடைந்து, இந்த நாடுகளில் சில ஒன்றுடன் ஒன்று மோதவும், பகைமை வரவும அமைதியின்மையும் பதட்டமும் தோன்றவும் இடமுண்டு.

1985 டிசம்பர் 7, 8-ம் திகதிகளில் டாக்காவில் கூடிய ஏழு நாடுகளின் தலைவர்கள் விடுத்த கூட்டுப் பிரகடனம் படிப்படியாக நடைமுறைக்கு வரும் பட்சத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை காலப் போக்கில் இந்நாடுகள் வெற்றி கொள்ளமுடியும்.

சிறிய நாடு பெரிய நாடு என்ற பாகுபாடு இன்றி கூட்டு முயற்சியையும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் நாடுகள் முன்னெடுக்கவேண்டும்.

உதாரணமாக ஒரு விஷயத்தை எடுப்போம். மாநாட்டிற்கான தயாரிப்புக் கூட்டத்தின்போது, ஆப்கானிஸ்தானிலிருந்து அந்நியத் துருப்புகள் வெளியேற வேண்டுமென்ற பிரேரணை முன்வைக்கப்பட்டது. இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகள் இதனை விரும்பின. இப்பிரேரணையில் சோவியத் யூனியனின் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதை இந்தியா பிடிவாதமாக எதிர்த்தது; பிரேரணை கைவிடப்பட்டது. இப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் அபிலாஷைகளை இந்தியா எந்த நிலைப்பாட்டுடன் புரிந்து கொள்ள முயல்கிறது?

இந்தியா, கடந்த காலத்தை மீளப் பரிசீலனை செய்து பிராந்திய நாடுகளின் அச்சத்தைப் போக்கவும் அவற்றின் அபிலாஷைகளைப் புரிந்தும் செயல்படுவது இப்பிராந்தியத்தினது மட்டுமல்ல உலகத்தினதும் அமைதிக்கு உத்தரவாதமானது.

★ ★

## ★ சிவத்தம்பியும் 'புதுசு'ம்

'புதுசு' சஞ்சிகை (10) படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 'மல்லிகைப் பந்தலில்' செங்கை ஆழியான், கலாநிதி சிவத்தம்பி அவர்களின் ஆய்வுகள் பற்றி எழுப்பிய விமர்சனங்கள் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்துள்ளது. 'புதுசு' சஞ்சிகையும், சேரனின் இரண்டாவது கவிதைத் தொகுதிக்கு கலாநிதி சிவத்தம்பி அவர்கள் 'மல்லிகை'யில் எழுதிய விமர்சனத்தைக் கொண்டு பிறிதோர் விமர்சனத்தைச் செய்துள்ளது.

அதுபற்றிய எமது அபிப்பிராயத்தைப் பின்னர் நோக்கலாமெனினும் இவ்வித முயற்சியை வரவேற்கிறோம். கலாநிதி சிவத்தம்பி அவர்கள் மாக்ஸிஸ லெனினிஸத்துறை சார்ந்த விஞ்ஞானபூர்வமான ஆய்வாளர் என்றே அறிமுகமாகியுள்ளதால் இத்துறையில் இவரது ஆய்வுகள், அறிமுகங்கள் பலவித விமர்சனங்களுக்குள்ளாகியிருப்பது நியாயமானதே.

சற்றடே றிவியூ (Saturday Review) வார சஞ்சிகை 1984 செப்டம்பர் 15, 22 திகதிகளில் சிவத்தம்பி அவர்களினால் ஏற்கனவே எழுதப்பட்ட (On the Social Composition of the Tamils) என்ற கட்டுரையை மறு பிரசுரம் செய்தது. இக் கட்டுரையை மாக்ஸிஸ லெனிச கண்ணோட்டத்தில் கலாநிதி சி. சிவசேகரம் அவர்கள் விமர்சனம் செய்து ஒரு சிறு கட்டுரையாக 1984 Oct. 5 அதே ஆங்கில வார சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார். அது பிரசுரிக்கப்படவில்லை. காரணம் தெரியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கலாநிதி சிவத்தம்பி அவர்கள் மாக்ஸிஸலெனினிஸவிஞ்ஞான பூர்வமான ஆய்வுத்துறைகளை மேற்கொள்பவரென முத்திரை குத்தப்பட்டிருப்பதால், ஆய்வுத்துறையில் ஈடுபடும் புதியவர்களும், முன்னையவர்களும் தமது நிலையை மறுபரிசீலனை செய்ய உதவவும், கலாநிதிசிவத்தம்பி அவர்களின் ஆற்றலை சரியான திசையில் முன் தள்ளவும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் தொடர்வது நல்லது. ★

● சுப்பராயர் ●

# தொண்டமானின் நம்பிக்கையும் ஜெயவர்த்தனவின் சுயரூபமும்!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், இன்றைய அரசின் அமைச்சருமான திரு. தொண்டமான் அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு ஒருபேட்டி அளித்திருந்தார். அப்பேட்டியில் 'இந்திய வம்சாவழி மக்களின் பிரசாவுரிமைப் பிரச்சினையும், தமிழர் பிரச்சினையும் ஜனாதிபதியாக இருக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் தான் தீர்த்துவைக்க முடியும் அவரிடம் தான் சிங்கள தீவிரவாதிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கும் திறமை இருக்கிறது. ஆதலினால் ஜே. ஆரின் காலத்திலேயே இப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நமது கடமை அவரது கையைப் பலப்படுத்துவதேயாகும்' என்று கூறியுள்ளார்.

திரு. தொண்டமானின் கூற்று புதிய ஒன்று அல்ல. என்றும் ஜே. ஆரையும் மற்றவர்களையும் பிரித்துப்பார்க்கும் அணுகுமுறையை அவர் நீண்ட காலமாகவே கடைப்பிடித்து வருகிறார். அதாவது ஜே. ஆர். ஒரு சிறந்த ஜனநாயகவாதி என்றும் அவர் இந்திய வம்சாவழி மக்களினதும், தமிழ் மக்களினதும் உரிமைகளை வழங்கக் கூடிய நிலையில் உள்ளவர் என்றும், ஆனால் அவரது தீவிரவாத சிங்களச் சகாக்களே முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் என்றும் தொண்டமான் இப்பொழுதும் நம்புகிறார். இவ்வாறு அவர் நம்புவதற்கும், ஜே. ஆரின் உண்மைத் தோற்றத்தைக் காணவிடாது தடுப்பதற்குமான அம்சம் தான் இருவருக்கும் பொதுவான வர்க்க ஐக்கியம் என்ற அடிப்படை நிலைப்பாடாகும். வர்க்க ரீதியில் தொண்டமானுக்கும் சரி அவரையொத்த ஏனையோருக்கும் சரி ஜே.

வெகுஜனன்

ஆரைப் போன்ற நம்பத்தகுந்த ஒரு நீண்டகால அரசியல் தலைவர் இலங்கையில் இல்லை. ஆனால் அந்த வர்க்க நம்பிக்கை தோட்டத்தொழிலாளர்களின் ஜீவதரப் பிரச்சினையிலோ, தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைப் பிரச்சினையிலோ எவ்வகையிலும் எதிர்பார்க் முடியாத ஒன்றாகும்.

எண்பது வயதை அண்மித்த, இலங்கை அரசியலில் அரை நூற்றாண்டுக்குமேல் தொடர்ச்சியாகத் தன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி வந்த பிற்போக்கு ஆளும் வர்க்க சக்திகளின் தலைவரான ஜே ஆர் தனது இறுதி ஆண்டுகளில் தானும் தேசத்தை மோசமாக அச்சுறுத்தி நிற்கும் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என நம்புவது வீண்தனமான நம்பிக்கை என்றே கொள்ள வேண்டும். அவர் ஆட்சியைக் கையேற்ற காலத்தில் இருந்து இன்றுவரை அவரது சொல்லையும் செயலையும் அவதானித்தால் அவர் இலங்கையில் பிரச்சினைகளை பூதாகரமாக்குவதற்கு பிரதான அச்சாணியாக இருந்து வந்துள்ளாரா? அல்லது பிரச்சினைகளை திறமையாகத் தீர்த்து வைத்துள்ளாரா? என்பதை அனுமானிக்க முடியும்.

ஜே. ஆரைப் பொறுத்தவரை இந் நாட்டில் இனப்பிரச்சினை தீர்வுக்கு வராது எவ்வளவிற்கு இழுத்தடிக்க முடியுமோ அந்தளவிற்குத் தேவையான ஒன்றாக உள்ளது. அதன் மறைவிலேயே இலங்கையை அந்நிய மூலதனத்தின் நவகாலனியாகவும், அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் தேவைக்கான ஒரு நாடாகவும் மாற்றி அமைத்து வருகிறார். இலங்கைமக்கள் தமக்கிடையில் சச்சரவு இன்றி வாழும் சூழ்நிலை ஏற்பட்டால் அவர்கள் ஒரே நேரத்தில் நாற்புறத்தில் இருந்தும் இந்த அரசையும் அதன் தேசவிரோத — மக்கள் விரோத செயற்பாடுகளைப் பார்த்து அதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்க முற்பட்டுவிடுவார்கள். அதைத் தடுக்கக் கூடிய கேடயம் இனப்பிரச்சினை மட்டுமே. இனப்பிரச்சினை மேன்மேலும் உக்கிரமாக்குவதன்மூலம்ஒரேநேரத்தில்தமது பேரினவாத வெறிக்கு இரை தேடிக் கொள்வதும், நாட்டை ஏகாதிபத்திய இரும்புப் பிடிக்குள் இறுக்கிக் கொள்வதும் என்ற இரட்டைச் செயலை செய்யக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய நிலையில் மிகவும் திட்டமிட்டே செயல்பட்டு வரும் ஆளும் வர்க்கத் தலைவனான ஜே. ஆரிடம் நம்பிக்கை வைப்பது அல்லது அவரது கையைப் பலப்படுத்துவது என்பது வீண்பேச்சு என்றே கூறவேண்டும். திரு. தொண்டமான் தனது வர்க்க நிலையில் ஜே. ஆரை நம்புவதில் நியாயம் இருக்கலாம். ஆனால் தோட்டத் தொழிலாளர்களையோ, அழிவுகளைக் கண்டுவரும் தமிழ்மக்களையோ அவரை நம்பும்படி, அவரது கரத்தைப் பலப்படுத்தும்படி கேட்கக்கூடாது. ஏனெனில் தொண்டமான் கூறும் மக்கள் சக்தி மக்கள் போராட்டம், துணிவு, எதிர்கால நம்பிக்கை, ஒற்றுமை என்பனவற்றை அந் 'நம்பிக்கை' குட்டிச் சுட்டிச்சுவராக்கி விடும். என்றுமில்லாதவாறு ஜே. ஆரின் சுயரூபம் அம்பலப்பட்டுள்ள இவ் வேளை அவர் மீது நம்பிக்கை வைப்பது என்பது அர்த்தமற்றதும் அவலமானதுமாகும். ★

● ஆசிரியருக்குக் கடிதம்:

## தமிழ்க் கல்வெட்டுப் பற்றிய ஒரு பார்வை

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் வெளியாகிய சீன சஞ்சிகையான சைனாபிக்ரோறியலில் பிரசுரமான சில குறிப்புக்கள், ''புதிய பூமி'' பத்திரிகையில் ஒரு செய்தியாக இடம்பெற்றிருந்தது. இக் குறிப்புக்கள் பற்றி முழுமையாகப் பார்க்கும் பொருட்டு சீன சஞ்சிகையைப் புரட்டிப் பார்த்தபொழுது எனது பார்வையில் சில கருத்துக்கள் தோன்றின.

15ம் நூற்றாண்டில் பிரபல கடல்பயணியான செங்-ஹீ என்பவர் சீன, பாரசீக, தமிழ் மொழிகளில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டைக் காலியில் வைத்துச் சென்றமை பற்றிய குறிப்புகளும்;

தென் இந்தியப் பகுதியான கூலி என்னும் இடத்தில் வாழ்ந்த மக்கள் சாணகத்தினால் செய்த திருநீற்றை நெற்றியில் பூசிக்கொண்டே புத்த வணக்கத்தைச் செய்தனர் என்னும் மார்க்கோவன் என்பவரின் குறிப்புகளும் புகைப்பட விளக்கங்களுடன் இடம்பெற்றிருந்தன.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை ஒரு விகாரமான ரூபத்தை அடைந்திருக்கும் இந்நேரத்தில் இவ்விரு குறிப்புக்களையும் சீன சஞ்சிகையில் வெளியிட்டமை மக்கள் சீனத்தின் ஓர் அர்த்தமுள்ள நோக்காகவே எனது பார்வையில் பட்டது.

தமிழ் மக்கள் போற்றும் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை பௌத்தத்தின் பெருமையை விளக்கிநிற்பதையும், சிலப்பதிகாரத்தின் தலைவியான கண்ணகியின் சிலையை சிங்கள மக்கள் ''பத்தினித் தெய்வம்'' எனப்போற்றி பௌத்த விகாரையில் வைத்து வணங்குகிற நிகழ்வும், கதிர்காமத்தில் சிங்களமக்களின் 'ஸ்கந்த' (முருகன்) வழிபாடும் தமிழ்— சிங்கள மக்களின் தொன்மையான கலாச்சாரத் தொடர்புகளை விளக்கி நிற்கின்றன.

இலங்கை வரலாற்றிலே தமிழ்— சிங்கள மன்னர்களின் படையெடுப்புக்கள் ஓர் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தன்மை கொண்டதாக இருக்கின்றனவேயன்றி இன, மத, மொழி வெறியாக இருந்ததில்லை. துட்டகைமுனு என்னும் சிங்கள மன்னன் தன்னிடம் தோல்வியுற்ற தமிழ் மன்னனாகிய எல்லாளனுக்கு சிங்களவரும் மரியாதை செலுத்தும் வகையில் எழுப்பிய நினைவுச் சின்னம் பற்றிய வரலாறும்; மகாபராக்கிரமபாகு ஓர் தமிழ் மன்னனின் மகளையே மனைவியாகக் கொண்டு தானும் தனது மனைவியும் வழிபடுவதற்காக பௌத்த— இந்து ஆலயங்களை அருகருகே அமைத்த வரலாறும்; சப்புமல் குமரையா என்ற தமிழனைத் தளபதியாகக் கொண்ட சிங்கள மன்னன் படையெடுப்புகள் நடத்திய வரலாறும்; கண்டியின் கடைசிமன்னனும் ஒருவரைத்தவிர்ந்த ஏனைய பிரதானிகள் அனைவரும் கண்டி ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையெழுத்திட்ட வரலாறும்; பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் படித்த இலங்கையருக்கான தேர்தலில் சிங்களவரான மார்க்கஸ் பெர்னாண்டோ என்பவரை சேர். பொன். இராமநாதன் சிங்களமக்களின் வாக்குகளாலேயே தோற்கடித்து வெற்றிபெற்ற வரலாறும்; இன, மொழி, மதத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் தொன்றுதொட்டு வந்த தொடர்புகளையே வெளிக்காட்டி நிற்கின்றன.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி மக்கள் சீனத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது ''பயங்கரவாதப் பிரச்சினை'' பற்றிப் பிரஸ்தாபித்தபொழுது சீன ஜனாதிபதி ''தமிழ் மக்களின் பிரச்சினையைத்தானே குறிப்பிடுகிறீர்கள்'' எனப் பதிலடி கொடுத்தமையும்; இவ்வாறாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை ஓர் பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்ட இலங்கைதரப்பில் முற்பட்டபோதெல்லாம் அதை ஒரு தேசிய இனப்பிரச்சனையாகவே கருதிக் கருத்து வெளியிட்ட போக்கு 55 தேசிய இனங்களின் பிரச்சினைகளை புதிய ஜனநாயகப் புரட்சியின் ஓர் அங்கமாக மாற்றிவெற்றி பெற்ற மக்கள் சீனத்தின் பெருமையை உயர்த்தி நிற்கிறதல்லவா? ★

செல்வி. எஸ். தமிழ்ச்செல்வி—யாழ்ப்பாணம்

### தொழிற்சாலைகளில் சுரண்டலுக்கு ஆளாகும்

# பெண் தொழிலாளர்களின் அவல நிலை!

இன்று தமிழ் மக்கள் மத்தியில் பெண்விடுதலை, பெண் சமத்துவம், பெண் உரிமை பற்றி அதிகம் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன. அதேவேளை பொருளாதார ரீதியில் பெண்கள் மோசமான சுரண்டலுக்கு உட்படுத்தப்படுவது பற்றி வெளியே சமுதாயத்திற்கு தெரிவதில்லை. அவர்கள் வாழுகின்ற அவல வாழ்க்கை பலரது கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டாது நிற்கின்றன. இந்நிலைக்குப் பரிகாரம் ஓர் அடிப்படை சமுதாய மாற்றம் தான் என்பதாக இருந்த கணிசமாகவே உள்ளன. நெசவு—உடை தயாரிப்புத் தொழில்களோடு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில், பீடிசுற்றும் தொழிலகங்களில், கண்ணாடித் தொழிற்சாலைகளில் பலவகைப் பதனிடும் தொழிற்சாலைகளில், அச்சகங்களில், கடைச்சிப்பந்தி வேலைகளில், வேறும் பல சிறுசிறு தொழில்களில் எல்லாம் பெண்கள் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டு மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள். இவற்றுடன் தனியார் மருத்துவ மனைகளில், தனியார் நிறுவனக் காரியாலயங்களில் பெண்

அண்மையில் புத்தூர் என்னுமிடத்தில் அமைந்துள்ள ஒரு மின்தறி நெசவாலையில் வேலை செய்யும் சில பெண் தொழிலாளர்களை புதிய பூமியின் நிருபர் சந்தித்து உரையாடிய போது தமது நிலை பற்றி அத் தொழிலாளர்கள் கூறிய விடயங்கள் மிகவும் அதிர்ச்சி தருவதாகவே இருந்தது. சுரண்டலின்கொடூரம் எவ்வளவிற்கு அவர்களை வாட்டி வதைக்கின்றது என்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

அந்த மின்தறி நெசவாலையில் மொத்தம் நூற்றி ஐம்பது தொழிலாளர்கள் வரை வேலை செய்கிறார்கள். நான்குபேர் மட்டுமே ஆண் தொழிலாளர்கள். சகல பெண்தொழிலாளர்களும் 15

## நெசவாலைத் தொழிலாளர்களுடன் ஒரு சந்திப்பு:

தொகுத்தவர்: எஸ். எஸ். கௌரி

போதிலும் பெண் தொழிலாளர்களுக்கு நிவாரணம்தேடப்படல் வேண்டும். அதற்கான போராட்டங்களும் இயக்கங்களும் உடனடி அவசியமாகின்றன.

வடபகுதியில் விவசாயத் தொழில்களில் குறைந்த கூலியில் அன்றாட வேலைக்கு அமர்த்தப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகமானதாகும். இத்துறை தவிர்ந்த ஏனைய துறைகளில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஊழியர்கள் மிகக் குறைந்த ஊதியத்துடன் வேலைவாங்கப்படும் துன்பநிலை தொடர்கின்றது. பெண்கள்தானே என்ற இரண்டாம்தர மனப்பான்யுடனேயே அவர்கள் நோக்கப்படுகிறார்கள். அதன் அடிப்படையிலேயே தாம் நினைத்தவாறு சம்பளங்களையும் வழங்கி வருகிறார்கள். இது பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மோசமாக்குவதுடன் அவர்களது சமூகத் தரத்தையும் ஏளனப் படுத்துகின்றது.

வயது முதல் 30 வயதிற்கு உட்பட்ட திருமணமாகாதவர்கள், திருமணமானவர்கள் அத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அங்கு நாற்பத்தி ஐந்து மின்தறிகள் உள்ளன. இதில் 25 இந்திய மின்தறிகளும், 20 யப்பானிய மின்தறிகளுமாகும். இந்திய மின்தறி ஒன்றுக்கு ஒரு தொழிலாளியும், யப்பானிய மின்தறி இரண்டுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

# அராஜகவாதம் என்றால் என்ன?

## ஒரு கேள்வியும் பதிலும்

சமுதாயத்தின் பிரச்சனைகளையும் சமுதாய முரண்பாடுகளையும் அறிந்தாலும் பிரதான முரண்பாட்டைச் சரியாக அடையாளங்காணத் தவறினால் தீர்வுகள் மிகவும் தவறானவையாயும் அபாயகரமானதாயும் அமையும் என்பதற்கு வரலாற்றில் நிறைய உதாரணங்கள் உள்ளன. அராஜகவாதம் அவற்றுள் ஒன்று என்றால் தவறில்லை.

நவீன அராஜகவாதத்தின் தந்தை என்று கருதத் தக்கவரான பாக்குனின் மாக்ஸின் காலத்தில் வாழ்ந்தவர். வர்க்க சமுதாயம் பற்றியும் வர்க்க முரண்பாடுகள் பற்றியும் புரட்சி மூலம் முதலாளித்துவம் தூக்கி எறியப்பட வேண்டியவை பற்றியும் அவருக்குக் கருத்து வேறுபாடு இருக்கவில்லை ஆயினும் அவரது ஆய்வுகள் பிரதான முரண்பாட்டைத் தவற விட்டு விட்டன. சமுதாயத்தின் ஸ்தாபனப் படுத்தப்பட்ட தன்மையை, அதிலும் முக்கியமாக அரசு யந்திரத்தை, அவர் பிரதான முரண்பாடாக அடையாளங் கண்டார். மனிதனின் விடுதலை அரசு யந்திரம் இல்லாது ஒழிக்கப்படுவதன் மூலமே சாத்தியம் என்ற கருத்து நவீன அராஜகவாதத்தின் அத்திவாரமாகி விட்டது. அரசு என்பது ஒரு கருவி. ஒரு சமுதாய முரண்பாட்டின் விளைபொருள் என்பதற்கு மாறாக அதுவே பிரதான முரண்பாடாகக் காணப்பட்டது. இதன் விளைவாக எதிர்பார்க்கக் கூடியவாறு, பாட்டாளிவர்க்கக் கட்சிக்கும், அதன் புரட்சிக்கும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கும், சோஷலிச அரசிற்கும் விரோதமாகவே அராஜகவாதம் இயங்கியது. வர்க்க முரண்பாடுகள் உலகில் உள்ள வரை அரசு யந்திரம் தொடர்ந்தும் இருக்கும் என்பதையும் முதலாளித்துவ அதிகார அரசும் பாட்டாளிவர்க்க அதிகார அரசும் முற்றிலும் வேறுபட்டவை என்பதையும் அராஜகவாதம் மறுக்கிறது. இதன் விளைவாக அராஜகவாதிகள் எழுந்தமான முறையில் போராட்டங்களை எதிர்பார்ப்பதுடன் தொழிற் சங்கங்கள் முதலாக மாக்ஸிஸக் கட்சிகள் வரை சகல தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களையும் பகைமையுடன் நோக்குகின்றனர்.

சர்வதேச ரீதியான தொழிலாளர் இயக்கத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஒட்டி அராஜகவாதம் தன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. ஆயினும் ஸ்பெயினில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் போது அராஜகவாதிகள் அங்கு குறிப்பிடத்தக்க அளவில் செயற்பட்டனர். இறுதியில் அவர்களால் பாஸிஸ விரோத சக்திகளுடன் ஐக்கியப்பட்டுப் போராட இயலாது போயிற்று. 1968இல் பிரான்ஸில் ஏற்பட்டுத் தோல்வியுற்ற கலகத்தில் அராஜகவாதிகள் சிலர் முன்னணியில் நின்றனர். எவ்வாறாயினும், அராஜகவாதம் முக்கியமான ஒரு மக்கள் சக்தியாக இயங்கும் வாய்ப்பு வரலாற்றால் எப்போதோ நிராகரிக்கப்பட்டு விட்டது.

அராஜகவாதம் ஒரு சித்தாந்தம் என்ற வகையிலும் ஒரு செயல் முறை என்ற வகையிலும் தோற்று விட்டது என்றாலும் அராஜகவாதப் போக்குகள்ட்ரொட்சிசவாதம் சீர்திருத்தவாதம் போன்ற பிற தவறான போக்குகள் போன்று மாக்ஸிஸ ஸ்தாபனங்களுள் தலை தூக்குவது நாம் எதிர்பார்க்க முடியாத ஒன்றல்ல. பேரளவில் மாக்ஸிஸம் பேசும் ஸ்தாபனங்களுள், அதிலும் முக்கியமாக வாலிப சக்திகளையும் எழுந்தமான போராட்டங்களையும் மிகவும் முக்கியப்படுத்தும் சக்திகள் மத்தியில், அராஜகப் போக்குகள் இயல்பாகவே அதிகமாகக் காணப்படுவன.

ஸ்தாபன ரீதியான கட்டுப் பாடுகளை மீறும் தன்மை, மத்தியத் தலைமையின் வழிகாட்டலுடன் அமைந்த ஜனநாயகத்தை ஏற்க இயலாமை, நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் நடத்தப்படும் திட்டமிட்ட போராட்டங்கட்கும் பதிலாக எழுந்தமான முறையில் ஏற்படும் போராட்டங்கள் மீது விருப்பம் போன்றவை அராஜகத்தின் சில வெளிப்பாடுகள்.

இளைஞர்கள் மத்தியில், முக்கியமாக அரசியல் அறிவும் ஸ்தாபன அனுபவமும் குறைவானவர்கள் மத்தியில், காணப்படும் அவசரத்தன்மை நிதானமின்மை ஆகியன பல சமயங்களில் அவர்களை அராஜகவாதப் போக்குகளில் தள்ளி விடுகின்றன. இதன் விளைவாக அவர்கள் ஸ்தாபன விரோதமான செயல்களில் மட்டுமன்றி மக்களுக்கு விரோதமான குற்றச் செயல்களிலும் இறங்க நேரிடுகிறது.

அராஜகம் எழுந்தமான முறையில் ஏற்படும் கிளர்ச்சிகளை ஊக்குவிக்கிறது, ஆனால் எழுந்தமான முறையில் புரட்சி நடக்கும் என்பது தவறானது என்று வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. அராஜகவாதம் அரசு இயந்திரம் இல்லாமல் ஒழிவது என்பதையே புரட்சியின் இலட்சியமாக்கி மத்திய முரன்பாடாக்கியதன் விளைவாகத் தன்னையே கட்டுப்பாடின்மைக்குப் பலியாக்கிக் கொள்கிறது. சரியானதொரு பாட்டாளி வர்க்கத் தலைமையிலான கட்சியும் அதன் வழிகாட்டலின் பின்னான வலிய வெகுஜன இயக்கமும் கட்டியெழுப்பப் படாதவரை அரசியல் அனுபவமில்லாத வேகம் மிகுந்த வாலிபர்கள் தாம் அறியாமலே அராஜகவாதத்திற்குப் பலியாவது மிகவும் சாத்தியம். முற்போக்குச் சக்திகள் இது பற்றி மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். ★

அவதானி

# பிலிப்பீன்ஸ்: ஒரு சர்வாதிகாரத்தின் இறுதி நாட்கள்

பிற்போக்குவாதிகள் வரலாற்றினின்று கற்க மாட்டார்கள் என்பது சாராம்சத்தில் உண்மை. பிலிப்பின்ஸ் சர்வாதிகாரி மாக்கோஸும் அவனது அமெரிக்க எஜமானர்களும் இந்தோ சீனத்தின் விடுதலைப் போராட்டங்களிலிருந்தும் சமீப காலத்தில் மேற்கு ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் விருத்தியடைந்துள்ள போராட்டங்களின் வெற்றிகளினின்றும் எதையுமே கற்றதாகத் தெரியவில்லை. அடக்கு முறையும் ஆயுத பலமும் மக்களை என்றென்றைக்குமே அடக்கி ஒடுக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இன்று பிலிப்பீனில் நடப்பவை பழைய வரலாற்றை மட்டுமின்றி இலங்கை உட்பட உலகின் பல வேறு நாடுகளிலும் உள்ள நிலவரங்களையும் நமக்கு மனதிற்குக் கொண்டு வருகின்றன.

மோகன்

ஸ்பானியர்களால் 5 நூற்றாண்டுகள் முன்னர் கைப்பற்றப்பட்டு ஏறத்தாழ முற்றாகவே கத்தோலிக்க நாடாக்கப்பட்ட பிலிப்பீன்ஸ் தீவுகள் அமெரிக்க ஆதிக்கத்தினின்று பெயரளவில் அரசியல் சுதந்திரம்பெற்றாலும், பிலிப்பீன்ஸ் இன்றும் அமெரிக்காவின் முக்கியமான ஆசிய நவ கொலனி நாடாக இருக்கிறது. பிலிப்பீன்சில் அமெரிக்க கடற்படை விமானம்படைத் தளங்களும் உள்ளன. பிலிப்பீன்ஸ் பொருளாதாரம் அமெரிக்க பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. பிலிப்பீன்ஸ் அரசு அமெரிக்காவின் ராணுவ பொருளாதார உதவியில் பூரணமாகவே தங்கியுள்ளது. அமெரிக்காவின் பிற்போக்குவாத மத நிறுவனங்கள் உட்பட்ட பல பிற்போக்கு பிரசார நிறுவனங்களின் ஆசிய மத்தியஸ்தானங்களும் பிலிப்பின்சின் தலை நகரமான மணிலாவில் உள்ளன.

பிலிப்பின்சில் 20 வருடங்கட்கும் மேலாக சர்வாதிகாரியாக இருக்கும் மாக்கோஸ் தென்வியட்னாமின் டியெம், கொரியாவின் பாக் போன்ற சர்வாதிகாரிகளை ஒத்தவன். டியெமும், பாக்கும் அமெரிக்க அதிகாரத்தை நீடிக்க அவர்கள் மேலும் பயன்பட மாட்டார்கள் என்று காணப்பட்டதை அடுத்து எதிர்பாராத விதமாகக் கொலை செய்யப்பட்டார்கள். இன்று மாக்கோஸீக்கும் இவ்வாறு நடக்கலாம் என்று சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஆயினும் நமக்கு முக்கியமானது இதுவல்ல, மாக்கோஸின் வீழ்ச்சி மக்களாட்சியின் மலர்ச்சியாக அமையுமா என்பதே நம் ஆவல்.

பிலிப்பீன்சின் அரசியலும் பொருளாதாரமும் அமெரிக்க ஆதரவில் தங்கி நிற்கின்றன என்று அறிவோம். அமெரிக்கத் தயவில் உள்ள பொம்மை ஆட்சிகள் போன்று பிலிப்பின்ஸ் ஆட்சியும் ஊழல், ராணுவ அடக்குமுறை, பிற்போக்குத் தன்மை ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றது. அமெரிக்காவின் எடுபிடிகள் ஆட்சி நடத்தும் பல நாடுகளின் போன்று எதிர்க்கட்சித் தலைவர்களைக் கொலை செய்தும் சிறைக்கு அனுப்பியும் கட்சிகள் மீது கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதித்தும், பேச்சுரிமை பிரசுர உரிமை போன்றவற்றை மறுத்தும் ராணுவ மிரட்டல் தேர்தல் ஊழல்கள் போன்றவற்றைப் பாவித்தும் பேரளவில் ஜனநாயக முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக மாக்கோஸ் இருந்தாலும் பிபீப்பின்ஸ் அவனுடையதும் அவனுடைய சகபாடிகளான ராணுவ அதிகாரத்தினதும் சர்வாதிகார அடக்குமுறையின் கீழேயே உள்ளது. அங்கு கிராமங்களிலிருந்து நகரங்கட்குக் குடிபெயர்வும் வறுமையும் வேலையின்மையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. விபசாரமும் குழந்தைகளைக் கூலி வேலைக்கு அமர்த்துவதும் பெருகி வருகிறது. வாழ்க்கைத்தரமும் சுகாதாரமும் மோசமாகி வருகின்றன. சிறுபான்மை இனமக்கள், முக்கியமாக மிந்தனோவோ தீவில் உள்ள முஸ்லிம் மக்கள், படு மோசமாக

(5ம் பக்கம் பார்க்க)

# 23 வருடச் சிறையிலும் உறுதி குலையாப் போராளி

# நெல்சன் மண்டலா

நெல்சன் மண்டலா இன்று தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டத்தின் மதிப்புக்குரிய தலைவராக உலக மக்களால் கணிக்கப்படுகிறார். அவருக்கு இப்பொழுது வயது அறுபத்தியேழாகும். இருபத்திமூன்று வருடங்களாகத் தென்னாபிரிக்கக் கொடும் சிறையில் சிறைவாசம் அனுபவித்து வருகிறார். இந்த வயதிலும், இத்தனை சிறைக் கொடுமையிலும் தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சிக்கு தலைவணங்காது தனது சொந்த மக்களின் விடுதலைக்கு உரமூட்டுபவராக இருந்துவரும் அவரது உறுதியான நிலை போராடும் மக்களுக்குப் புத்துணர்வையும், நிறவெறி ஆட்சிக்குப் பெரும் சவாலையும் கொடுத்து வருகின்றது.

நெல்சன் மண்டலா ஐம்பதுகளின் ஆரம்பத்தில் ஒரு அகிம்சை வாதியாக இருந்தவர். அன்றைய சீர்திருத்தவாத - சிறு சலுகைகளை வெள்ளை நிற வெறியர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தில் இணைந்தார். ஆனால் நிறவெறி ஆட்சியிடம் சமாதானமாக, அகிம்சையாக கறுப்பு மக்கள் எதனையும் பெற முடியாது என்பதை மண்டலா உட்பட ஏனையவர்களும் படிப்படியாக உணரத் தலைப்பட்டனர். 1960ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி ஜொகனஸ் பேர்க்கின்



தென் பகுதி நகரான ஷாப்பேவில்லேயில் கறுப்பு ஆபிரிக்க மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது நிறவெறி ஆட்சி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. அதில் அறுபத்தியொன்பது கறுப்பின மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இக் கொடுமையின் பின்பே மண்டலா போன்ற தலைவர்கள் பலாத்காரப் போராட்டப் பாதையில் சுதந்திரம் பெறுவது என முடிவு செய்தனர்.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் ராணுவ அமைப்பு உருவாக்கப் பட்டது. உம கொன்ரோ வீசிஸ்வே - (தேசத்தின் கொடுவாள்) என்ற அந்த அமைப்பின் முதலாவது ஆணைத்தளபதியாக மண்டலா பொறுப்பேற்றார். இத் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்பு 1962 ஆகஸ்ட் மாதத்தில் கைதுசெய்யப்பட்டார். ஆயுள் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. நீதிமன்றத்தில்அவர் ஆற்றியஉரை கறுப்பு மக்களின் எதிர்ப்பு இயக்கத்தின் ஜீவநாக விளங்குகின்றது. சிறையில் இருந்து அண்மையில் தனது மனைவி, மகள் மூலமாக கறுப்பின மக்களுக்கு அனுப்பிவைத்த செய்தியில் பலாத்காரமான கறுப்பின மக்களின் உறுதியான போராட்டமே நிறவெறி ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய ஒரே வழி எனக்கூறியுள்ளார். ★

# ''சிங்கள'' - யூ. என். பியும் புதிய பிச்சா பாத்திரமும்

கடந்த சில மாதங்களில் ''சிங்கள-பௌத்த'' யூ.என்.பி. அரசு இருநூறுக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளது. நீதிமன்றத்தில் காணாமல்போன சிங்கள இளைஞர்களின் உற்றாரால் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. அண்மையில் பொலீஸ் நிலையமொன்றில் ஒரு சிங்கள இளைஞர் இறந்து கிடக்கக் கண்டு அவர் ''தற்கொலை'' செய்துவிட்டார் என்ற செய்தி பரப்பப் பட்டது.

''சிங்கள மக்களின் பாது காவலர்கள்'' என்று செப்பித்திரியும் இந்த அரசு சிங்கள மக்களுக்கெதிரான பாஸிஸ அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒன்றும் புதுமையில்லை. கல்வி வெள்ளை அறிக்கையையும் பல்கலைக் கழகத்திருத்தச் சட்டத்தையும் எதிர்த்த போராட்டத்தில் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களின் இரு சிங்கள மாணவர்கள் கொல்லப்பட்டனர். இந்த ஆட்சியினர் பிரதான எதிர்க்கட்சிக்குள் 'நக்சலைட்டுக்கள்' என்று கூறித் தமது பாராளுமன்ற எதிரிகளைப் பழிவாங்கியவர்கள்; 1983-யூலை கலவரத்தை ''தேசிய எழுச்சி'' என வர்ணித்துவிட்டு, அதை நடாத்தியவர்கள் 'இடது சாரிகள்' என்று கூறி மூன்று கட்சிகளைத் தடை செய்தவர்கள்; மேலதிக நேரவேலை செய்யமறுத்து வேலைநிறுத்தம் செய்ய முற்பட்ட சிங்கள இனத்தைச் சேர்ந்த வங்கி ஊழியர்களை ''தமிழ் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்யும் துரோகிகள்'' எனத் திட்டித் தீர்த்துப் பயமுறுத்தியவர்கள்; தாதிமார் வேலை நிறுத்தத்தில் சிங்கள பௌத்த பிக்குவைத் தலைவராகக் கொண்ட ஊழியர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்தவர்கள். இவ்வாறாக 'சிங்கள' யூ. என் பி. அரசு சிங்கள மக்களுக்கே; செய்த அனர்த்தங்கள் அதிகம்!

இவர்களது நீண்ட ஆட்சிக்காலத்தில் சிங்கள மக்களிடையே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் போர்க்கொடி தூக்கத் தொடங்கிய இவ்வேளை யூ. என். பி ஆட்சியினர் ''மாக்சிசப் பயங்கரவாதிகள்'' என்ற 'புதிய துரோகி'களைக் கண்டுபிடிக்கத் தொடங்கியுள்ளனர் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லையே!?

எமது நாட்டின் சுதந்திரத்தையும்- சுயாதிபத்தியத்தையும் மேலாதிக்க வல்லரசுகளிடம் விற்றுப்பிழைத்துவரும் ஆட்சியினர் பிச்சையெடுப்பதற்கான பாத்திரங்களை அடிக்கடி மாற்றி வருகின்றனர். ஆரம்பத்தில் 'அபிவிருத்தி'ப் பிச்சைப் பாத்திரம் ஏந்தியவர்கள், அதன் மவுசு குறைந்து போகக் ''தமிழ்ப்பயங்கரவாதிகள்'' என்ற பிச்சைப் பாத்திரத்தை பாவிக்கத் தொடங்கினர். தற்போது இந்தப் பாத்திரமும் கலரி மங்கிப் போவது கண்டு ''மாக்சிசப் பயங்கரவாதிகள்'' என்ற புதிய பிச்சா பாத்திரத்தைப் பயன்படுத்திப்பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளனர் எனச் சிங்கள— தமிழ் பொது மக்கள் பரவலாகப் பேசத் தொடங்கியுள்ளனர்.

❀ சோமர் ❀

★

## பெண் தொழி....

3ம் பக்கத்தொடர்

ஒரு தொழிலாளியும் என்ற அடிப்படையில் வேலை செய்ய வேண்டும். பகல் இரவு தொர்ச்சியான மூன்று நேர வேலையாகும். காலை 6 மணி தொடக்கம் 2 மணிவரை, பின்பு 2 மணி தொடக்கம் இரவு 9-30 வரை, இரவு 10 மணி தொடக்கம் காலை 6 மணிவரையாகும். எட்டு மணி நேரவேலை. அரை மணி மட்டும் சாப்பாட்டுவேளை. மிகுதி நேரம் ஒரே நிலையாக நின்று வேலை செய்யவேண்டும். மின்தறி இரைச்சலுக்கு. தூசி சுவாசத்திற்குள் செல்வதற்கு எவ்வித பாதுகாப்பும் கிடையாது. ஒரே இடத்தில் நிற்பதால் கால் உளைவு ஏற்பட்டால் எவரையும் மாறிவிடவும் முடியாது, அதேவேளை நெசவில் தவறு ஏற்பட்டால் (நூல் முடிவதில், சட்டன் மாற்றுவதில்) தொழிலாளர் நஷ்டம் செலுத்தவேண்டும். இரவு வேலை செய்வோருக்கு சாப்பாடு என்பார்கள், சில நாட்கள் செல்ல தேனீரும் பிஸ்கற்றுகவும் அது மாறிவிடும். அது நிர்வாகத்தின் விருப்பத்தைப் பொறுத்தது.

இப்பொழுது முக்கியமான விடயத்தைக் கவனிப்போம். ஒரு தொழிலாளி இங்கு சேரும் போது ஆரம்பச் சம்பளம் 5 ரூபா. நிர்வாகம் விரும்பும் போது விரும்பியவர்களுச்கு சம்பளம் கூட்டுவார்கள். கூட்டப்படும் தொகை ஐம்பது சதம் அல்லது ஒரு ரூபாவாகவே இருக்கும். ஒன்றரை வருடத்திற்கு மேல் வேலைசெய்யும் ஒருவரது சம்பளம் 6 ரூபா 50 சதம். மூன்று வருடமாக வேலைசெய்பவர்களுக்கு 13 ரூபா 50 சதம் ஆகக்கூடியதாக ஆறு வருடம் வேலை செய்வோருக்கு மட்டும் 17 ரூபா 50 சதம் வழங்கப்படுகிறது. நிரந்தரம், சேமலாபநிதி, வருடாந்த போனஸ், வருடாந்த சம்பள உயர்வு, நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதம் என்ற விடயங்கள் என்பன இத்தொழிற்சாலையின் பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு எட்டாத விடயங்கள். அப்படி ஏதாவது பெயரளவில் சில தொழிலாளர்களுக்கு இருந்தால் முதலாளியினதும்—நிர்வாகத்தினதும் விருப்பத்திற்கு அமைந்த ஒரு சில தொழிலாளர்களுக்கு மட்டுமேயாகும்.

சரி அடுத்ததாக சுரண்டலின் தன்மையை அவதானிப்போம். ஒரு பெண் தொழிலாளி எட்டுமணி நேர வேலையில் 15 யார் முதல் 20 யார் வரை வேலை செய்திருக்க வேண்டும் என்பது நிர்வாக விதியாகும். இது மின்தறியின் தரத்தையும் பொறுத்ததாகும். அநேகமாக 20 யாரை பெரும்பாலானவர்கள் நெசவு செய்கிறார்கள். குறைந்தது ஒரு தொழிலாளி சராசரி 17 1/2 யார் நெசவு செய்வதாக வைத்துக்கொண்டால், 2 1/2 யார் நீளமான ஒரு படுக்கை விரிப்பின் விலை 130 ரூபாவானல் 17 1/2 யாரிலும் 7 படுக்கை விருப்புவரும். ஏழு படுக்கை விரிப்பை விற்பதன் மூலம் முதலாளிக்கு (130×7 =910 ரூபா) 910 ரூபாகிடைக்கிறது. ஆனல் நெசவு செய்த பெண்தொழிலாளிக்கு எட்டு மணித்தியாலத்திற்கு 5/00 அல்லது 6/50 அல்லது 13/50 அல்லது 17/50 மட்டுமே கிடைக்கிறது. படுக்கை விரிப்புடன், சேட்துணி வகைகள், சாற வகைகள் என்பன இங்கு நெசவு செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் கூடியதாகும். எனவே ஒருதொழிலாளி உற்பத்தி செய்த துணியின் மொத்தப் பெறுமானத்தில் பேனின் பின்னங்கால் அளவான சம்பளம்கூடக்கிடைக்கவில்லை. இதையே கார்ல் மாக்ஸ் தனது மூலதனம் பற்றிய ஆய்வில் தொழிலாளி வர்க்கம சுரண்டப்படுவதையும், மூலதனக்காரன் உபரி மதிப்பை அபகரிப்பதையும் பற்றி விளக்கியிருந்தார். இவ்வர்க்க சுரண்டலை தொழிலாளி வர்க்கம் கண்டு உணர்ந்து அதற்கு எதிராகப்போராடாதவரை கூலி அடிமையாக வாழ்ந்து அல்லலுறவே செய்யும்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் மட்டுமன்றி கிட்டத்தட்ட சகல தொழிற்சாலைகளிலுமே பெண் தொழிலாளர்கள் மோசமான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பெண்களின் உழைப்பை கணக்கில் கொள்ளாத அவர்களை இரண்டாம் தரநிலையில் வைத்துள்ள-பெண்களும் தம்மைத்தாமே தாழ்த்தி தாழ்வு மனேநிலைக்கு உட்படுத்தியுள்ள—ஏதோ கிடைக்கிறது போதும் என்ற திருப்தி மனப்பான்மையில் உள்ள இன்றைய சமுதாயச் சூழ்நிலையை முதலாளி வர்க்கம நன்கு பயன் படுத்தி வருகின்றது. அதனல் லாபத்தைக் குவித்து மாடிமேல் மாடியாகப் பணத்தைக குவிக்கின்றது. ஆனல் தொழிலாளர்கள் மீண்டும் மீண்டும் ஏழ்மைக்குள் தள்ளப்படுகிறார்கள். விடிவின்றி வேதனையில் அமிழ்ந்து போகிறார்கள். இதனலேயே தொழிலாளி வர்க்கம் ஆண் பெண் வித்தியாசமின்றி வர்க்கரீதியான சிந்தனைக்கு திரும்பி வர்க்கரீதியான போராட்டங்களுக்கு தம்மைத் தயார் படுத்த வேண்டும என கம்யூனிஸ்ட்டுக்கள் மீண்டும் மீண்டும் இடித்துரைத்து வருகிறார்கள். இவ் உண்மை தொழிலாளர்களினல் புரிந்து கொள்ளப்படாது விட்டால் கூலி அடிமை முறையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. முதலாளி முதலாளி தான் தொழிலாளி தொழிலாளி தான். இன, மொழி, மதம் பெருமை எல்லாம் சுரண்டலுக்கு அப்பாற்பட்டதேயாகும்.

ஆண் தொழிலாளர்களை விடப் பெண் தொழிலாளர்கள் ஆகக் கூடிய சுரண்டலுக்கு ஆட்படுத்தப்படும் அவல நிலைக்கு எதிராகப் பெண்தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களோடு இணைந்து போர்க்குரல் கொடுக்க முன்வரல் வேண்டும், அப்பொழுது தான் ஓரளவு தானும் சுரண்டலின்—அடக்குமுறையின் அகோரத்தை தணிக்கமுடியும்.

பெண் தொழிலாளர்கள் ஏனைய தொழிற்சாலைகளில் விவசாயத்தொழிலில் சுரண்டப்படும் அவல நிலைபற்றிய விபரங்களைப் புதிய பூமி தொடர்ந்து வெளியிடும். தொழிலாளர்களின் மனம் திறந்த அபிப்பிராயங்களை அது வரவேற்கும். ★

## பிலிப்பீன்ஸ்...

3ம் பக்கத் தொடர்

ஒடுக்கப் படுகின்றனர். 20 வருடங்கட்கும் அதிகமாக அங்கு மாக்கோஸின் சர்வாதிகாரத்திற்கு எதிராகச் செயற்பட்டு வந்த பல வேறு ஜனநாயக சக்திகள் ஒன்று படும் சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. அதை விட முக்கியமாக மாக்கோஸுக்கு எதிராக நீண்ட காலமாகப் போராடி வந்த புதிய மக்கள் சேனை எனும் மாக்ஸிஸ—லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் ராணுவம் இன்று நாட்டின் பல பகுதிகளில் வெற்றி பெற்று பரவலான மக்கள் ஆதரவை வென்று வருகிறது.

மாக்கோஸுக்கு எதிராக நீண்டகாலமாக உக்கிரமாகப் போராடிவந்த சக்தி பிலிப்பீன்ஸ் மாக்ஸிஸ லெனினிஸக் கம்யூனிஸ்ட் கட்சியே. அடுத்தபடியாக மிந்தனவோ தீவின் முஸ்லீம் மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தைக் குறிப்பிடலாம். வெகுஜனப் போராட்டத்தின் விஸ்தரிப்பின் போக்கில் இந்த இரண்டு போராட்ட சக்திகட்கு மிடையிலான சினேக உறவு வளர்ச்சி பெற்றது. மாக்கோஷின் ஜனநாயக விரோத செயல்கள் ஆரம்பத்தில் ஆட்சிக்கு அனுதாபமாக அல்லது பகைமை உணர்வு இல்லாத மக்கள் மத்தியில் கசப்புணர்வைஏற்படுத்தின. இதன் விளைவாக கத்தோலிக்க மத குருமார் கூட மாக்கோஸைப் பகிரங்கமாகக் விமர்சனம் செய்யும் நிலவரம் உருவானது.

பிலிப்பீன்ஸ் மாக்ஸிஸ—லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் அமைந்த புதிய மக்கள் சேனையின் வெற்றிகளும் மக்கள் மத்தியில் மாக்கோஸுக்கு விரோதமான உணர்வுகளின் வளர்ச்சியும் பிலிப்பீனிய உயர் நடுத்தர வர்க்கங்களிடையே சிறிது கலவரத்தைத் தூண்டின. ஜனநாயக சீர்திருத்தங்களின் அவசியம் பற்றி நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தவும் அவர்கள் முற்பட்டனர். ஆயினும் மாக்கோஸும் அவனது நெருங்கிய நண்பர்களான இராணுவத் தலைமையும் அதன் விளைவுகளைப்பற்றி நன்றுகவே அறிந்திருந்தனர். எனவே ஒருபுறம் சீர்திருத்தம் மற்றிக் கண்துடைப்பாக சில முயற்சிகள் பற்றி உறுதி மொழிகள் தரப்பட்டன. ஆயினும் நடைமுறையில் மார்க்கோஸின் அடக்குமுறை ஆட்சி மேலும் உக்கிரமாகியது. மாக்கோஸால் நீண்டகாலம் சிறையில் வைக்கப்பட்டிருந்த பூஸுவா ஜனநாயகவாதியான அக்குவினே சிறையால் விடுவிக்கப்பட்டு நாட்டைவிட்டு வைத்திய சிகிச்சைக்காகப் போக அனுமதிக்கப்பட்டார். அவர் திரும்பி வருவதற்கும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் உரிமை தருவதாக உறுதி வழங்கப்பட்டது. 1983ல் திரும்பி வந்த அக்குவினே விமானத்தால் இறங்கும்போது சுட்டுக்கொல்லப்பட்டார். மக்களுடைய சந்தேகம் நியாயமாகவே மாக்கோஸ்மீது திரும்பியது. இதைத் திசைதிருப்ப மாக்கோஸ் நடத்திய விசாரணை நாடகம் உண்மையான கொலைகாரனையும் மாக்கோஸின் பங்கையும் மூடிக்கட்டும் திசையில் போய்க்கொண்டிருக்கிறது. இன்று மார்க்கோஸ் ஆட்சி பலத்த வெகுஜன எதிர்ப்புக்கு உள்ளாகி இருப்பதை அறிந்த அவனுடைய அமெரிக்க எஜமானர்களின் நெருக்குதலாலும் மக்களின் எதிர்ப்பைத் திசை திருப்பவும் 1986 பெப்ருவரியில் ஜனதிபதித் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஒழுங்காகவும் நியாயமாகவும் நடக்குமோ என்பது சந்தேகத்துக்கு உரியது. எதிர்க் கட்சியினரிடையே உள்ள வேறுபாடுகளை ஊழல் மூலம் தனக்குச் சாதகமாக மாக்கோஸ் பயன் படுத்தும் வாய்ப்பும் உள்ளது. எவ்வாறுயினும் தேர்தலின் முடிவுகள் பிலிப்பீன்ஸின் பிற்போக்கு ஆளும் வர்க்கத்திற்கும் அவர்களது அமெரிக்க எஜமானர்கட்கும் மேலும் தலைவேதனையையே தரும் என்பது உறுதி.

மாக்கோஸ் தொடர்ந்தும் ஆட்சியிலிருந்தால் அது புதிய மக்கள் சேனையின் செல்வாக்கை மேலும அதிகரிப்பதோடு புரட்சிமூலமான ஜனநாயக வெகுஜன இயக்கத்தின் வெற்றிக்கு முடிவில் இடமளிகும். மாக்கோஸ் வீழ்ந்தால் புதிய ஆட்சிகளும் மாக்கோஸின நேசசக்திகளான ராணுவத்துக்கும் பெருமுதலாளிகட்கு மிடையிலான முரண்பாடுகளை வளர்க்கும் மாக்கோஸுக்கு எதிராகத் தேர்தலில் அக்குவினேவின் மனைவி நிற்பது பெருமளவும் உறுதியாகியுள்ளது. அவரது ஆதரவு சக்திகள் தமது வெற்றியை அடுத்து அமெரிக்க தளங்களை அகற்றுவது பற்றி மக்களுக்கு உறுதி அளித்துள்ளனர். எனவே எவ்வாறு தேர்தல் முடிவுகள் அமைந்தாலும் பிலிப்பீன்ஸின் அமெரிக்க ஏகாதிபத்திய விரோதப் போராட்டம் உக்கிரமடைவது தவிர்க்க இயலாததாகும். பிலிப்பீன்ஸில் ஜனநாயகத்தின் வெற்றி இறுதியில் மக்களது ஆயுதப்போராட்டத்தின் மூலமே சாத்தியமாகும். ★

# வட-இலங்கை தனியார் வைத்தியக் கல்லூரி

# தமிழ் மக்களிடம் சர்ச்சையை கிளப்பியுள்ளது!

வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் வைத்தியக் கல்லூரி தமிழ் மக்கள் - மாணவர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக தேசிய மாணவர் மன்றம் என்னும் மாணவர் அமைப்பு அண்மையில் யாழ் பல்கலைக் கழகத்தில் சகல அமைப்புகளையும், சகல ஸ்தாபனங்களையும் அழைத்து ஒரு கருத்தரங்கையும் நடத்தியது. இதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பிரதிநிதியும் கலந்துகொண்டு கட்சியின் கருத்தைக் கூறினார்.

காலம் கடந்த நிலையில் தானும் இவ்விடயம் பற்றிய கருத்துக்களும் சர்ச்சைகளும் இடம்பெறுவது நல்ல விடயமே. ஏனெனில் இது தமிழர் சமுதாயத்தின் சாதாரண மக்களின் எதிர்கால வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ள அம்சமாகும்.

இத் தனியார் வைத்தியக் கல்லூரியின் அடிப்படைக் கரு யூ. என். பி. ஆட்சி கொண்டு வந்த கல்வி வெள்ளை அறிக்கையில் இருந்தே உருவாகியது. பின் அது பல்கலைக் கழகச் சட்டமூலம் என்ற உருவில் வளர்ந்தது. கல்வி வெள்ளை அறிக்கையும் பல்கலைக் கழகச் சட்ட மூலமும் கல்வியை வர்க்க அடிப்படையில் தரம் பிரிப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. இதன் எதிர்கால ஆபத்தை இனம் கண்டு வெள்ளை அறிக்கைக்கு எதிராக எமது கட்சியும் வாலிபர் இயக்கமும் எதிர்ப்பு இயக்கத்தை நடாத்தியது. கருத்தரங்குகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள் மூலம் அவ் எதிர்ப்பு இயக்கத்தை நடாத்தி வந்தது. ஆனால் அதற்கு உரிய ஆதரவு பரவலாக வழங்கப்படவில்லை. ஒரு சிறு எண்ணிக்கையானவர்கள் தரப்படுத்தலினால் பாதிக்கப்பட்ட வேளை அது முழுத் தமிழர் சமுதாயத்தையும் பாதிப்பதாகக் காட்டி பெரும் குரல் வைத்து அதற்கு எதிராக இயக்கங்களை நடத்திய தமிழ் உயர் வர்க்கங்களைச் சேர்ந்தோர் உண்மையாகவே முழு தமிழர் சமுதாயத்தையும் குறிப்பாகச் சாதாரண தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை வர்க்க ரீதியில் தடுத்து நிறுத்த முனைந்துள்ள கல்வி வெள்ளை அறிக்கைக்குமௌனமாகப் பச்சைக்கொடி காட்டினர். அது மட்டுமல்ல அவ் வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் பல்கலைக் கழகச் சட்டமூலம் (இச்சட்ட மூலத்தின் கீழ் தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது) வந்தபோது தெற்கிலே பெரும் எதிர்ப்பு இயக்கம் இடம்பெற்றது. கொழும்பு பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வியக்கத்தின் போது சுட்டுக் கொல்லவும் பட்டனர். துர்ரதிஷ்டம் என்னவெனில் அவ்வேளை வடக்கிலோ—யாழ் பல்கலைக்கழகத்திலோ சிறு எதிர்ப்பு இயக்கம் கூட முன்னெடுக்கப்படவில்லை இது சுய விமர்சன ரீதியில் ஆழ்ந்து கவனிக்கப்படுவது அவசியம். ஏனெனில் எதிர்கால நடவடிக்கை ஒவ்வொன்றிலும் மிக நிதானமாகவும் நீண்டகால நோக்கிலும் செயல்பட வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகின்றது.

புதிய பல்கலைக்கழக சட்ட மூலத்தின் கீழ் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிகளில் (கொழும்பில் பொறியியல் கல்லூரியும் உண்டு) சேர்ந்து படிக்க ஒரு மாணவனுக்கு ஒரு லட்சம் தொடக்கம் ஒன்றரை லட்சம் ரூபாவரை தேவைப்படுகிறது. இங்கு தகுதியோ ஆற்றலோ அவசியம் இல்லை. பணமும் உயர் வர்க்க அந்தஸ்து மட்டும் போதுமானது. அதேவேளை இந் நடைமுறை பல்கலைக் கழக வைத்திய பீடத்தை இயல்பாகவே சீரழித்து சின்னாபின்னப் படுத்திவிடும்.

யூ. என். பி. யினது வர்க்க சுபாவத்திற்கு ஏற்ற கல்விக் கொள்கையை மக்கள் மீது திணித்து வருகிறது. எனவே எமது போராட்டங்களும் இயக்கங்களும் ஒருவழிப் பாதையில் மட்டும் அமையக் கூடாது. நோக்கங்களுக்காக மட்டுமன்றி விளைவுகளுக்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற உண்மையைப் புரிந்துகொண்டால் நிதானமாகவும், நீண்ட நோக்கிலும் தமிழர் சமுதாயத்தில், சகல உழைக்கும் மக்களினதும் அடிப்படை நலன்களுக்காகச் சரியான போராட்டங்களை முன்னெடுக்க முடியும். அது இறுதியில் வெற்றி பெறவும் செய்யும். ★

## அது அமெரிக்காவில்

எயிட்ஸ் என்ற பயங்கரத் தொற்று நோய் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட அமெரிக்கர்களைப் பீடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நோய் போதை வஸ்துப் பாவனை ஹிப்பி வாழ்க்கை முறை, அதீத பாலுறவு, தன்னினச் சேர்க்கை போன்ற இளம் தலைமுறையினரைத் திட்டமிட்டுச் சீரழிப்பதற்கு என்றே தோற்றுவிக்கப்பட்ட ஏகாதிபத்திய கலாச்சாரக் குப்பைத் தொட்டியில் இருந்தே இக்கொடிய நோய் உருவாகி உள்ளது. அமெரிக்க கலாச்சாரத்தைப் புகழ்ந்து பாடும் விதேசிய அடிவருடிகளுக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

## இது இலங்கையில்

இலங்கையில் மேக நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் 80 வீதமானவர்களுக்கு விபச்சாரிகள் மூலமாகவே இந்நோய் பரவி உள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள் கொழும்பில் மட்டும் 15 ஆயிரம் விபச்சாரிகள்

## மனித உரிமை,...

1ம் பக்கத்தொடர்

கிற்கு விசுவாசம் தெரிவித்த ஏகாதிபத்திய - முதலாளித்துவ பாசிச நாடுகள் தத்தமது நாடுகளில் மனித உரிமைகளை துாசாகவே காலில் வதைகளில் வாழ்வை இழந்தோர் — விசாரணையின்றி இருப்போர் யாவரும் 'பயங்கரவாதிகள்'. அதற்கும் மேலால் 'மாக்சியப் பயங்கரவாதிகள்'. புத்தரின் புனித தர்ம பூமியில் அரசுக்கு எதிரான அத்தனை பேருமே பயங்கரவாதிகள்தான். மனித

## காங்கேசன் சீமெந்து ஆலை அந்நியக் கம்பனிக்கு தாரைவார்ப்பா?

## மனித உரிமை,...

1ம் பக்கத்தொடர்

இற்கு விசுவாசம் தெரிவித்த ஏகாதிபத்திய - முதலாளித்துவ பாசிச நாடுகள் தத்தமது நாடுகளில் மனித உரிமைகளை தூசாகவே காலில் போட்டு மிதித்து வருகின்றன. அந்த நாடுகளின் வரிசையில் இலங்கையும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இங்கு சாசனங்கள், ஷரத்துக்கள், நீதி, நியாயம் யாவும் வெறும் எழுத்துக்கள் மட்டுமே. மனித உரிமைகள் மனிதாபிமானம் என்பவை மருந்துக்குக்கூட கிடையாத நிலை உருவாகிவிட்டது. இங்கு எவரும், எந்த இடத்திலும் எந்த வேளையிலும் சுட்டுக் கொல்லப்படலாம். அவர்கள் யாவரும் 'பயங்கரவாதிகள்' என்ற பதத்திற்குள் அடக்கப்படுவர். கொன்றவர்கள் 'தேசிய வீரர்கள்' என்ற பதக்கம் பெறுவர். சிறைகளில் அடைக்கப்பட்டோர் - சித்திரவதைகளில் வாழ்வை இழந்தோர் — விசாரணையின்றி இருப்போர் யாவரும் 'பயங்கரவாதிகள்'. அதற்கும் மேலால் 'மாக்சியப் பயங்கரவாதிகள்'. புத்தரின் புனித தர்ம பூமியில் அரசுக்கு எதிரான அத்தனை பேருமே பயங்கரவாதிகள்தான். மனிதனின் விலைமதிப்பற்ற பெறுமதி பற்றி முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் பேசுவதெல்லாம் தமது வர்க்க நிலைக்கு உட்பட்டதேயாகும். தமது வர்க்க நலனுக்கு எதிராக மக்கள் எழுந்தால் மனித உயிர்கள் அவர்களுக்கு அற்பமானதே. இன்று நாளாந்தம் எத்தனை கொலைகள் அரசு யந்திரத்தால் வீழ்கின்றன. எத்தனை சித்திரவதைகள்? எவ்வளவு காலச் சிறைக் கொடுமை. அவை யாவும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களே. இது இலங்கையில் மனித உரிமைகளின் விலையை இழிவாக்கி இறக்கியுள்ளது. அதை உலக சமூகம் உற்றுநோக்குகிறது.

# காங்கேசன் சீமெந்து ஆலை அந்நியக் கம்பனிக்கு தாரைவார்ப்பா?

காங்கேசன்துறை சிமெந்து ஆலையை ராட்சத பிரிட்டிஷ் கம்பனியான பிரிட்டிஷ் புளு சேக்கின் கம்பனிக்கு கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து செய்திகள் வருகின்றன. ஏற்கனவே தரமான உற்பத்தியும், பெயர்போன விற்பனையும் இருந்தும் தொழிலாளர்கள் - ஊழியர்களுக்கு உரிய சம்பளங்களோ, சலுகைகளோ, தொழிற்சங்க உரிமைகளோ முழுமையாக வழங்கப்படவில்லை. கூட்டுத்தாபனமாக இருந்து கொண்டே இந்நிலையாயின் அந்நியக் கம்பனியிடம் சென்றால் நிலை என்ன? ஐந்து வருடங்களுக்கு வரி விலக்கும்; பெரும்தொகையான லாபத்தைச் சுரண்டிச் செல்வதற்கும் இக் கம்பனிக்கு வழிவிட்டுக் கொடுக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இங்கு உயர் அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு இவ் அந்நியக் கம்பனி எவ்வாறு தொழிலாளர்களையும் ஊழியர்களையும் சக்கை வாங்கப் போகிறதோ என்ற பீதி தொழிற்சாலையில் பரவி உள்ளது. யூ. என். பி. யின் கூட்டுத் தாபனங்களைத் தனியார் கைகளில் ஒப்படைக்கும் பாதையிலேயே சிமெந்து ஆலையும் கைமாறுகிறது என்று பேசப்படுகிறது.

ணிக்கை சுமார் ஒரு லட்சம் பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் 80 வீதமானவர்களுக்கு விபச்சாரிகள் மூலமாகவே இந்நோய் பரவி உள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். கொழும்பில் மட்டும் 15 ஆயிரம் விபச்சாரிகள் உள்ளனராம். பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழக மாணவிகள் உட்பட மிகக் குறைந்த ஊதியம் பெறும் தொழிற்சாலைப் பெண்கள் இந்தத் ''தொழிலில்'' ஈடுபடுவதாக மேக நோய்த் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். இரத்தின நாயக்கா தெரிவிக்கிறார். பழம் பெருமை பேசும் தார்மீக ஆட்சியினருக்கு இது சமர்ப்பணம்.

## இது இலங்கையில்

இங்கு ''பயங்கரவாதிகள்'', ''மாக்சிசப் பயங்கரவாதிகள்'' என்போரிடம் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலியர்களிடம் இருந்து ஆலோசனை பெறப்பட்டு வருகிறது.

## அது இந்தியாவில்

அங்கு இந்தியப் பிரதமருக்கு டில்லி குதிரைப் பந்தயத் திடல் வீதியில் 5ம் 6ம் இலக்கத்தில் கட்டப்படும் புதிய இல்லத்தின் பாதுகாப்பு பற்றிய ஆலோசனைகளை இந்திய உளவு ஸ்தாபனமான ரோ(RAW) சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலியர்களிடம் இருந்தே பெற்றுள்ளது.

## வடக்கிலும்....

1ம் பக்கத்தொடர்

அமைந்த போது அதன் எதிர்கால விளைவுகளைப்பற்றி பலர் பாரதூரப் படுத்தவில்லை. சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் ஜே. ஆரின் இனப் பற்றையும், தமிழர் விரோத நிலைப்பாட்டையும் மெச்சினர். அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களின் ரத்தம் குடிக்கும் வெறியாட்டம் தொடருகின்றது. பேரினவாத வெறியின் விளைவால் நாடு அல்லோலப்படுகிறது.

தமிழர்கள் மத்தியில் இருந்து மட்டுமன்றி தற்போது சிங்கள மக்கள் மத்தியிலும் ''பயங்கரவாதிகள்'' ''மாக்சிசப் பயங்கரவாதிகள்'' கண்டுபிடிக்கப்பட்டு வருகிறார்கள். நூற்றுக்கணக்கானோர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இடதுசாரியினர், முற்போக்குவாதிகள், தீவிர அரசியல்வாதிகள் பலர் சிறைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ''அரசியல் எதிரிகள் வேட்டையாடப்படுவது நிறுத்தப்படவேண்டும். சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும், அரசியல் கைதிகள் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப் படுவதில் இருந்தும், அநீதியாக நடத்தப்படுவதிலிருந்தும் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்'' என்ற வற்புறுத்தலை அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான இயக்கம் வெளியிட்டுள்ளது. அவ்வியக்கம் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வியக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசுக்கு எதிரானவர்கள் என்ற அடிப்படையில் அவசர காலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் பல இளைஞர்கள் தெற்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது விபரங்கள் கூட உறவினருக்கு தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் தடுப்புக் காவலில் மிக மோசமாக நடத்தப்பட்டு வருகிறார்கள். சித்திரவதைகளுக்கு உள்ளாகும் இவ் அரசியல் சந்தேக நபர்களை விசாரணைக்கு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என அரசாங்கத்தை அவ்வியக்கம் வற்புறுத்தியுள்ளது.

இது தெற்கே நடைபெற்றுவரும் அரசின் அட்டூழியங்களை அம்பலமாக்கியுள்ளது. இதிலிருந்து பாசிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் யூ. என். பி. ஆட்சியே இந்நாட்டு மக்கள் அனைவரினதும் பொது எதிரி என்பது தெளிவாகிறது. அப்பொது எதிரி முறியடிக்கப்படல் வேண்டும். அதற்கான பொதுத்திட்டமும். பொதுத் தந்திரோபாயமும் நிதானமான வழிகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும். குறுகிய அரசியல் லாபங்களுக்கு அப்பால் இந்நாட்டு சிங்கள—தமிழ்—முஸ்லீம் மக்களின் அடிப்படை நலன்களில் இருந்து. இத்தகைய செயல்திட்டம் உருவாகி முன் செல்ல வேண்டும். இது பாராளுமன்ற அரசியல் சக்திகளைவிட அதற்கு அப்பால் உள்ள புரட்சிகர சக்திகளின் விவேகத்திலும் செயல்பாட்டிலுமே அதிகம் தங்கியுள்ளது. உண்மையான விடுதலைக்கு செயல்பட முயலும் தமிழ் இளைஞர்கள் இவ் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி செயல்படுவதும் அவசியம். ★

யாழ்ப்பாணம் 15/1; மின்சார நிலைய வீதியில் வசிக்கும் திரு. அ. சுப்பிரமணியம் அவர்களால், 407. ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1985 டிசம்பர் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.